27th July 1957]

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தக் கடன் கொடுத்த தொழில்களில் எந்தத் தொழில் இப்போது நடக்கிறது ? எது நடக்கவில்லை? இதில் லாபகரமாக நடக்கக்கூடியது எத்தனை ? நஷ்டத்தில் நடக்கக்கூடியது எத்தனை ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது தனியார் நடத்துகிற தொழிலுக்கு சகாயமாகக் கொடுக்கிற தொகை. எந்தெந்தத் தொழில் லாபகரமாக நடக்கிறது என்பது எனக்குத் தெரியாது. கடன் தவணையை சரிவர கட்டுகிற வரையில் நமக்கு அதைப் பற்றி கவலையுமில்லை.

District Welfare Officer for Tindivanam taluk.

* 299 *Q.*—**SRI M. JAGANNATHAN** : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to appoint an additional District Welfare Officer for Tindivanam taluk?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

Paddy and sugarcane cultivation in Tanjore district.

* 300 *Q.*—**SRI P. S. CHINNADURAI** : Will the Hon. the Minister for Home be pleased to state the acreage of land under—

(i) paddy cultivation; and

(ii) sugarcane cultivation in the Tanjore district during the years 1951–52 and 1956–57?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The following are the figures for Tanjore district :—

(i) 1,336,493 acres were under paddy during 1951–52 and 1,355,000 acres during 1956–57; and

(ii) 3,681 acres were under sugarcane during 1951–52 and 8,000 acres during 1956–57.

SRI P. S. CHINNADURAI : சபாநாயகர் அவர்களே, கரும்பு விளைச்சல் ஆகிற பகுதி சென்ற ஐந்து வருஷ காலத்தில் அதிகமாயிருப்பது உண்மையாகவே நெல் விளைச்சலாக இருந்திருக்கவேண்டியது. இது நெல் விளைச்சலை பாதிக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கரும்பு விளைவிக்கப்படுகிற பகுதியில் வேறு தானியங்கள் விளைவிக்கப்பட்டிருக்கலாம். முன்பு நெல் விளைவிக்கப்பட்டிருக்கலாம். தஞ்சையில் 13 லக்ஷம் எக்கரில் நெல் விளைவிக்கும் போது 5,000 அல்லது 6,000 எக்கர் வரையில் கரும்பு புதிதாகச் சாகுபடி செய்வது அதிகமில்லை. அதோடு அரிசி சாப்பிடுபவர்களுக்கு சர்க்கரையும் வெல்லமும் கூட வேண்டியிருக்கிறது.

SRI A. R. MARIMUTHU : கனம் சபாநாயகர் அவர்களே, தஞ்சை ஜில்லாவில் சர்க்கரை தொழிற்சாலை ஏற்படுத்துவதானது வரப்போகிற நிலச் சீர்திருத்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்வதாக ஆரம்பிக்கப் படுகிறது. இதனால் இந்தத் தொழிற்சாலைகளை நில சீர்திருத்தம் வந்த பிறகு ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே இந்தச் சபையில் தெரிவித்திருக்கிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டத்திலிருந்து கரும்பு ஆலைகளை ஆரம்பிக்கின்றவர்கள் கூட தப்பித்துக்கொள்ள முடியாது. அந்த முறையில் அந்தச் சட்டம் வகுக்கப்படும்.

[27th July 1957

SRI A. VEDARATHNAM PILLAI : கரும்பு சாகுபடி நெல் விளைச்சலை பாதிப்பது தஞ்சை ஜில்லாவில் மாத்திரம் தானா ? அல்லது இதர ஜில்லாக் களிலும் இந்த மாதிரி பாதிக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கரும்புச் சாகுபடி நெல் விளைச்சலை பாதிக்கவில்லையென்று தான் சொன்னேன். இதனால் இந்தக் கேள்வி எழுவதற்கே இடமில்லை.

SRI K. ANBAZHAGAN : ஆரூரான் சர்க்கரை ஆலை ஆரம்பித்ததற்குப் பின்னர் நெல் விளைந்த பல பகுதிகளை கரும்பு சாகுபடிக்கு மாற்றுகிறார்கள். மேலும் சர்க்கரை ஆலைகளை ஆரம்பிக்க அனுமதி அளிக்கும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறது. இதனால் இன்னும் பல நெல் விளையும் பகுதிகள் கரும்புக்கு மாற்றப்படும். இதை சர்க்கார் வரவேற்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி இன்னும் சில ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் நெல் பயிரிலிருந்து கரும்புக்கு மாற்றப்படுவதில சர்க்கார் கவலைப்படவில்லை. கரும்புப் பொருளும் நமக்கு வேண்டியிருக்கிறது. விவசாயிகளுக்கும் விவசாயம் கட்டுபடியாகவேண்டுமென்றால் நெல் பயிரையே வைத்துக்கொண்டிருந்தால் பலன் அளிக்காது. அப்போதைக்கப் போது ரொடேஷன் ஆப் கிராப்ஸ் வேண்டும். கரும்பு சாகுபடி செய்வதை வரவேற்கிறோம்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : நெல் விளையக்கூடிய நஞ்சை நிலத்தில் தான் கரும்பு விளைவிக்கமுடியுமென்று அமைச்சருக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுவும் தெரியும். இதில் இவ்வளவு கவலை கொள்ளாமல் இருக்கக்கூடிய நிலங்களின் பேரில் இன்னும் கவனம் செலுத்தினால் விளைச்சலை இரட்டிப்பாக்கலாம். கரும்பு உற்பத்தி யாவதைப் பற்றி அங்கத்தினர் கவலை கொள்ளவேண்டாமென்று தான் சொல்லுகிறேன்.

List of successful graduate and non-graduate teachers.

MR. SPEAKER : As the hon. Member Sri M. William is not in his place, the question No. 301 and answer will be printed in the proceedings.

* 301 Q.—SRI M. WILLIAM : Will the Hon. the Minister for Finance be pleased to state weather the Government have received the lists of successful graduate and non-graduate teachers selected by the former Travancore-Cochine State Public Service Commission?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir.

Scaling down of the sales-tax.

* 302 Q.—SRI T. S. RAMASWAMY PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have received any instructions from the Union Food Minister or from the Central Government regarding the scaling down of the sales tax on food articles; and

(b) if so, the details of the instructions and the action taken in pursuance thereof?